மெய்ஞ்ஞான ஒளி

1.குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

மேலான பொருளையும் தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள், மனதில் உள்ளே இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன். நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்திற்குள் இன்பப்பெருக்காய், கரை கடந்து பொங்கும் கடலாக விளங்கி நிற்கின்றாய்!

மேலான பொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிக அரிய செயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து, அருள் செய்வாயாக!

2. ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை?

- கண், செவி, வாய், மூக்கு, மெய் ஆகியன ஐம்பொறிகள் ஆகும்.
- கண்கள் மூலம் உயிர் இரக்கம் காட்டுதல் வேண்டும்.
- செவி மூலம் பெரியோர்களின் நற்சொல் கேட்டல் வேண்டும்.
- வாய் மூலம் துன்பத்தில் இருப்பவருக்கு ஆறுதல் கூறியும் இரக்கமான சொற்களையும் கூறுதல் வேண்டும்.
- மூக்கின் மூலம் எரிவாயு கசிவு உள்ளிட்டவற்றை உணர்ந்து, விபத்திலிருந்து தடுக்க உதவுதல் வேண்டும்.
- நம் உடல் மூலம் ஏழை எளியவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் முதியோர்களுக்கும் உதவுதல் வேண்டும்.

3. குணங்குடி மஸ்தான் சாகிபு குறிப்பு வரைக.

இயற்பெயர்: சுல்தான் அப்துல் காதர்.

இளம்வயதிலேயே முற்றும் துறந்தவர். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இருந்து ஞானம் பெற்றார்.

படைப்புகள்: எக்காலக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி.